**கெஸ்பேவ நகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 யூன் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 15 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கெஸ்பேவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் வரையிலும் செயற்திட்ட ஊழியர்களுக்குரியதாக அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 523,458 தொகை நிதியாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மார்ச் மாதத்திற்குரிய செயற்திட்ட ஊழியர்களுக்கு அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 110,526 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 தொகையான கணக்காய்வு கட்டணம் ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுக்காக மீளாய்வாண்டில் கூடுதலாக வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 23,961 தொகையான வட்டித் தொகை குறித்த செலவினத்தில் கழிக்கப்படாமல் திரட்டு நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் காண்பிக்கப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை அவற்றினை சான்றுறுதிப்படுத்தும் பயன்பாட்டு பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கம் செய்யும் போது, நிதிக்கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 12,048.395 மற்றும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 793,719 ஆகும்.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 17,124,670 தொகையான ஊழியர் கடன் தொகையில் நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 244,316 இனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 42,164,795 தொகையான மீள செலுத்தப்பட வேண்டிய வைப்பு மீதியினுள் 05 வருடங்களை விட விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,078,383 ஆக இருந்ததுடன், இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளுக்கமைய மேற்படி வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,296,461 கூட்டுத்தொகையான கணக்காய்வு கட்டணங்கள் 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 103,195,690 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 57,235,862 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தலினான செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாக சபையின் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான பொழிப்பாக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

| | 2015 | | | | 2014 | |
|---|---|---|---|---|---|---|
| **வருமான விடயம்** | **உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய வருமானம்** | **உள்ளபடியான அறவீடு** | **ஆண்டிற்கான நிலுவை** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **உள்ளபடியான அறவீடு** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 41,207 | 36,600 | 4,607 | 27,175 | 38,002 | 22,392 |
| குத்தகை வாடகை | 12,610 | 11,701 | 909 | 2,937 | 11,855 | 2,428 |
| அனமதிப்பத்திர கட்டணம் | 6,150 | 5,444 | 706 | 1,150 | 5,235 | 420 |
| ஏனைய வருமானம் | 218,303 | 38,303 | 180,000 | 275,212 | 178,354 | 127,993 |
| | 278,270 | 92,048 | 186,222 | 306,474 | 233,446 | 153,233 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

---------------------------------

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 அம் பிரிவின் பிரகாரம், வீதவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த நிலுவை ரூபா 26,749,745 ஆக இருந்ததுடன், இந்த மீதியினுள் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 05 இடங்களுக்குரிய ரூபா 1,099,094 ஆன மீதியொன்று 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாது காணப்பட்டது.

**2.2.3 குத்தகை வாடகை**

----------------------------

சபைக்கு சொந்தமான வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த 355 கடைத்தொகுதிகளுக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக ரூபா 2,176,712 ஆன நிலுவையொன்று காணப்பட்டது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

-----------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வருமானம் ஈட்டியவாறு இருந்த சபைக்கு சொந்தமான பழைமையான வாடி வீடொன்று உடைத்து அகற்றப்பட்டு அதற்காக ரூபா 52,929,240 தொகையான மதிப்பீடொன்றின் அடிப்படையில் பதிய கட்டிடத்தின் முதலாவது கட்டம் நிர்மாணிக்கப்பட்டு 2014 திசெம்பர் 04 ஆந் திகதி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் இந்த கட்டிடம் வருமானமீட்டக்கூடிய எந்தவொரு பணியிலும் ஈடுபடுத்தப்படாமையின் காரணத்தால், சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் கணக்காய்வின் போதும் இந்த கட்டிடத்தின் நிர்மாணத்திலான குறைபாடுகள் தொடர்பில் கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் இந்த கட்டிடத்தை சபைக்கு விளைவுள்ள வருமானமொன்றினை ஈட்டித்தரக்கூடிய முறையில் ஈடுபடுத்துவதற்கு சபை எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்ததாக நடாத்திச் செல்லப்படும் வாடி வீடுகளை புதுப்பிப்பதற்கான நடைமுறைக் கணக்கின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 14,539,268 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன், இந்த பணம் சேமிப்பு அல்லது நிலையான வைப்புக் கணக்கொன்றில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு வருடாந்தம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 353,026 ஆன முற்பணங்களை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான வீதவரி வருமானத்தை முகாமை செய்வதற்காக 2007 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்து நிறுவப்பட்டிருந்த மென்பொருள் கட்டமைப்பினுள் வீதவரி பிரிவின் எந்தவொரு நாளதுவரையாக்கப்பட்ட தகவலையும் ஒன்றிணைந்ததாக அல்லது பொழிப்பாக பெறக்கூடியதாக இல்லாதிருந்ததுடன், கட்டமைப்பில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை சீராக்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கணனிமயப்படுத்தப்பட்ட தகவல்கள் தொடர்பில் சபையின் உரிய மேற்பார்வையொன்று இடம்பெற்றிராமை மற்றும் தரவுகளின் பாதுகாப்பு தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 பெப்ரவரி 09 ஆந் திகதிய LGB/7/7/1/D1–2013 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் (மே. மா) சுற்றறிக்கையில் 60 வயதிற்கு அதிகமான ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்த கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 60 வயதிற்கு அதிகமான 4 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தி 60 வயதினை கடந்த திகதி முதல் 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 2,164,721 தொகை சம்பளங்களாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 வீதி அகழ்வுகளை பழைய நிலைக்கு கொண்டு வரல்

---

கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவினுள் கழு கங்கை நீர் வழங்கல் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் நீர்க் குழாய்களை இழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த வீதி அகழ்வுகளை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரும் செயற்பாட்டிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 24,020,350 தொகை 2011 மற்றும் 2013 ஆண்டுகளிலிருந்து பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 7,018,885 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் அழிவு நட்டம் ஏற்பட்டிருந்த 19 வீதிகளை இயல்பு நிலைக்கு கொண்டு வர வேண்டியிருந்தது. கணக்காய்வினால் இந்த விதிகள் தொடர்பில் 2015 செப்தம்பர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இதன் கீழான பல்வேறு வீதிகள் மக நெகும செயற்திட்டத்தின் கீழ் தாரிடப்பட்டிருந்ததுடன், ஏனைய வீதிகளில் உடைக்கப்பட்ட இடங்கள் மாத்திரம் மூடப்பட்டிருந்தது.

(ii) சில வீதிகள் எதுவித புனரமைப்பிற்கும் உட்படுத்தப்படாமல் இருந்தமையால் மிகவும் பழுதடைந்த நிலைக்கு உள்ளாகியிருந்தது.

(iii) சில வீதிகளின் ஒரு பகுதி மாத்திரம் புனரமைக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய பகுதி சிதைவடைந்து காணப்பட்டது.

(iv) வீதியின் இரு பக்கமும் உள்ள வீடுகளுக்கு நீர் விநியோகத்தை பெற்றுக்கொள்வதற்காக வீதிகள் செப்பனிடப்பட்டிருக்கவில்லை.

இதன் பிரகாரம் வீதி புனரமைப்பு செயற்திட்டத்திற்காக பெறப்பட்டிருந்த பணம் குறித்த செயற்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

**விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான ரூபா 385,300 பெறுமதியான 05 வாகனங்கள் 02 முதல் 05 வருடங்கள் வரையான காலமாக விளைவற்று காணப்பட்டன.

(ஆ) இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து 2012 பெப்ரவரி மாதம் கிடைத்த கொன்கிறீட் கலக்கும் இயந்திரம் மற்றும் 2013 நவம்பர் 13 அந் திகதி சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 140,000 தொகையான படகு நங்கூரம் ஆகியன எந்தவொரு பாவனைக்கும் எடுக்கப்படாமல் உப அலுவலகங்களில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

## 3.5 இனங்கானப்பட்ட நட்டம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 128 இல் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நகர சபையினால் முறையான நிதி நிர்வாகமொன்று பேணப்பட்டிராமையால், மீளாய்வாண்டினுள் வங்கி மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 487,204 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிலியந்தல பொது நூலகத்தில் வெளித்தரப்பினரால் 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இரவலாக பெறப்பட்டு மீள கையளிக்கப்படாத 300 புத்தகங்களை மீள பெறுவதற்கோ அல்லது அவற்றின் பெறுமதியான ரூபா 61,880 தொகையினை உரிய பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கோ 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------

மீளாய்வாண்டில் சபையின் அதிகார பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 213 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 42 நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள 213 செயற்திட்டங்களில் நிதியிடுவதற்கு உடன்பட்டுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்ததுடன், அவற்றுள் ஒரு செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

ஆண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதியேற்பாடுகளை மாற்றல் செய்ததன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிடையே 01 முதல் 236 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் நிலவிய 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது அக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

----------------------------------------

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 (1) மற்றும் (20) இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவின் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன், அவ்வாறு கேள்விக்குட்படத்தப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 5,811,019 ஆகும். முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட இரு கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் மேற்குறிப்பிடப்பட்ட திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) கணக்கீடு

(உ) வருமான நிர்வாகம்

(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(எ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு